

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 20-11-2025

# நிர்மலாவுக்குப் புரியாது!

**சி**ல நாட்களுக்கு முன்னால் கோவை வந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் அளித்த பேட்டி, அவருக்கும் அரசியலுக்கும், மக்களுக்கும், மாநில விருப்பங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையே உணர்த்துகிறது. அவருக்கு எதுவுமே புரியவுமில்லை. புரிந்து கொள்ளும் தன்மையும் இல்லை. புரிய நினைக்கவும் இல்லை. அதற்காகத்தான் அவரை நிதி அமைச்சராக வைத்துள்ளார்கள் போலும். அதற்காகத்தான் அடிக்கடி தமிழ் நாட்டுக்கு அனுப்பி பேட்டிகள் கொடுக்க வைக்கிறார்கள் போலும்!

- **பிரதமர் அறிவிப்பை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து சட்டங்களையும் நிறைவேற்றுகிறார்கள்.**
- **பிரதமர் மோடிக்கு நல்ல பெயர் வந்துவிடக்கூடாது என அவரது திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள்.**
- **பேரவையில் பலம் இருக்கிறது என்பதால் பிரதமருக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுகின்றனர்.**
- **இங்கு கல்வி என்றாலே எதற்கெடுத்தாலும் போராட்டம் நடத்துகிறார்கள்.**
- **நீட் மூலமாக ஏழைகள் படிக்கிறார்கள். அதை கொண்டு வந்தவர் பிரதமர் மோடி. கிராமப்புற மாணவர்கள் கூட தேர்ச்சி பெறுகிறார்கள்.**
- **மத்திய அரசின் திட்டங்கள் தமிழகத்திற்கு கிடைக்க விடாமல் செய்யும் திராவிடக்கட்சி தி.மு.க.**
- **மத்திய அரசை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதால் அதன் திட்டங்களை எதிர்க்கின்றனர்.**
- **மாநில அரசு கட்டும் வரியை எப்படி அந்த மாநிலத்திற்கே முழுமையாக திருப்பி தர முடியும்?**

அவர் சொன்னதை கோர்வையாகத் தொகுத்துப் பார்க்கும்போது கிடைத்தது இது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வாசித்துப் பார்த்தாரா எனத் தெரியவில்லை. மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த மூன்று வேளாண் சட்டங்களை பிரதமர் மோடியே திரும்பப் பெற்று விட்டார். குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசே நிறுத்தி வைத்திருக்கிறது.

தொகுதி மறுசீரமைப்பை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வர முயற்சித்தது. இதனை தெலுங்கானா மாநிலத்தில் பேசிய பிரதமர் மோடியே வலியுறுத்தினார். தொகுதி மறுசீரமைப்பு மூலமாக, தமிழ்நாட்டின் தொகுதிகள் எண்ணிக்கை குறையும் என்பதால் தி.மு.க. அதனைக் கடுமையாக எதிர்த்தது.

தொகுதி மறு சீரமைப்பை, மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மாற்றுவதன் மூலமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒழுங்காக கடைப் பிடிக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பின்னடைவைச் சந்தித்து நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிவைச் சந்திக்க வேண்டி வரும். இதன் மூலமாக தமிழ்நாட்டின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் பேசுவோர் எண்ணிக்கை குறையும். எனவேதான் தமிழ்நாடு எதிர்த்தது. இந்தக் கடுமை யான எதிர்ப்பைப் பார்த்து பின் வாங்கியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. 'அப்படி எந்தத் திட்டமும் இல்லை' என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பின் வாங்கினார். இவை எல்லாம் தெரிந்து இருந்தால் நிதி அமைச்சர் இப்படி பேசி இருக்க மாட்டார்.

பா.ஜ.க. கொண்டு வரும் அனைத்துத் திட்டங்களுக்கும் தி.மு.க. தடை போடுவதாகச் சொல்லி, தி.மு.க. மீது தவறான கருத்தை உருவாக்க நினைக்கிறார் நிதி அமைச்சர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கு என்ன திட்டங்கள் கொண்டு வந்துள்ளது என்பதைச் சொல்லி விட்டு, இதை எல்லாம் தடை செய்துவிட்டதாக நிர்மலா சீதாராமன் பட்டியலிட்டு இருந்தால் அதற்கு வரிசையாக பதில் சொல்லலாம். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

**ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்த 11 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டுக்கு அறிவித்த ஒரே சிறப்புத் திட்டம் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை என்பதுதான். 2005 ஆம் ஆண்டு அருண் ஜெட்லி, ஒன்றிய நிதி அமைச்சராக இருந்த போது அறிவித்த திட்டம் இது. 2019 தேர்தலுக்கு முன்னதாக அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி. இன்று வரை கட்டடம் எழுப்பவில்லை. இதுதான் பா.ஜ.க. அரசுக்கு தமிழ்நாட்டின் மீதான அக்கறை ஆகும். 'எய்ம்ஸ் மருத்துவமனை ஏன் கட்டவில்லை?' என்று கேட்பது தவறா? தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் என்னென்ன என்று கேட்பது தவறா?**

நிதி அமைச்சர் நிர்மலா அவர்கள், தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. அரசு கொண்டு வந்த திட்டங்களை முதலில் பட்டியல் இடவும். அதன்பிறகு விரிவான பதில் தரப்படும்.

**பள்ளிக் கல்விக்காக தர வேண்டிய ரூ.2000 கோடியை விடுவிக்காதது யார் தவறு? மாநிலங்களின் வரி உரிமையை தர மறுப்பது யார்? ஒன்றிய அரசின் திட்டங்களும் மாநில நிதியால் நடைபெற்று வருவதை அறிவாரா அமைச்சர்? மூன்று மிகப்பெரிய பேரிடர் நடந்த பிறகும், அதற்கு நிவாரண நிதி தராதது நிர்மலாவின் துறைதானே?**

எஸ்.ஐ.ஆர். பற்றியும் சொல்லி இருக்கிறார் நிதி அமைச்சர். "2000ம் ஆண்டுக்கு பிறகு 4 முறை எஸ்.ஐ.ஆர் நடந்திருக்கிறது. அப்போதெல்லாம் பிரச்சினை இல்லையா? மத்திய அமைச்சரவையில் தி.மு.க. இருந்த போதும் எஸ்.ஐ.ஆர். நடந்துள்ளது." என்று சொல்லி இருக்கிறார்.

**எஸ்.ஐ.ஆரை தி.மு.க. எதனால் எதிர்க்கிறது, என்ன சொல்லி எதிர்க்கிறது என்றே அவருக்குத் தெரியவில்லை. "நாங்கள் வாக்காளர் பட்டியலில் சீர்திருத்தம் செய்வதை எதிர்க்கவில்லை. எதற்காக அவசர அவசரமாகச் செய்கிறீர்கள்? தேர்தலுக்கு சில மாதங்கள் இருக்கும் போது ஏன் செய்கிறீர்கள்? மழை நேரத்தில் எதற்காகச் செய்கிறீர்கள்? பொறுமையாக, கால அவகாசம் கொடுத்து, நிதானமாகச் செய்ய வேண்டிய பணியை அவசரமாகச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?" என்பதுதான் தி.மு.க. எழுப்பும் கேள்வி ஆகும்.**

சுத்தமான, உண்மையான, நேர்மையான, ஒழுங்கான ஒரு வாக்காளர் பட்டியல் அமைவதை தி.மு.க.வோ, அதன் கூட்டணிக் கட்சிகளோ குறை சொல்ல வில்லை. ஆனால் அதனைச் செய்ய நினைக்கவில்லை தேர்தல் ஆணையம். வாக்காளர் பட்டியலில் இருக்கும் உண்மையான வாக்காளர்களை, எதைச் சொல்லியாவது நீக்க நினைக்கிறது தேர்தல் ஆணையம். அதனைத் தான் கடுமையாக எதிர்க்கிறோம். குழப்பத்தை ஏற்படுத்தப் பார்க்கிறது தேர்தல் ஆணையம். அதனைத்தான் எதிர்க்கிறோம்.

**இதெல்லாம் நிர்மலா சீதாராமனுக்கு புரியாது. ஏனென்றால் அவர் மக்கள் செல்வாக்கைப் பெற்று பதவிகளை அடைந்தவர் அல்ல. அவருக்கு மோடி செல்வாக்கு மட்டும் தான் உண்டு. அது போதும் என்று நினைப்பவரால் மக்கள் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முடியாது.**




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், வால்பாறை, கிணத்துக்கடவு மற்றும் சூலூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

## ஆவடி மாநகராட்சி பட்டாபிராம் பகுதியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், நவ.20-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 'நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பட்டாபிராம் சத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் ரத்தப் பரிசோதனை, இசிஜி மற்றும் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும், முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம். நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கினர். மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுபவர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்கோ கார்டியோகிராம், இசிஜி, எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்று நோய் பரிசோதனைகள், அந்த முகாமிலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் 1,500 பேர் பயனடைந்தனர்.

தொடர்ந்து முகாமில் 50 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தனிச் சிறப்பாக சமுதாய வளைகாப்பு சீர்களையும், ஊட்டச்சத்து பெட்டகத்தையும், மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றுத்திறனுக்கான சதவீத அடையாள அட்டையும் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்.

நிகழ்ச்சியில், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா. சரண்யா, மண்டலக் குழுத் தலைவர் வி.அம்மு, மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ், பகுதி செயலாளர் பொன்.விஜயன், மாநகர நல அலுவலர் சரஸ்வதி, மாவட்ட சுகாதார அலுவலர் பிரபாகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது முனைவர் பட்டத்திற்கான Provisional Certificate காண்பித்து வாழ்த்து பெற்றார்.

## எழும்பூர் தொகுதியில் திட்டப் பணிகள்!

சென்னை, நவ. 20-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.99-இல், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியம் சார்பில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

புரசைவாக்கம், பொன்னப்பா தெருவில், சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் சார்பில் பழைய கழிவுநீர்க் குழாய்களை அகற்றிவிட்டுப் புதிய, பெரிய விட்டம் கொண்ட கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்படும் பணி;

புரசைவாக்கம், லெட்டாங்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதியில் அமுதம் நியாயவிலைக் கடையை இடம் மாற்றுவதற்கு ஏற்ப மாநகராட்சிக் கட்டிடத்தில் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மராமத்துப் பணி ஆகியவை குறித்து ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

